Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vo2 - No 08 Pages 4 Sunday, 12 April 2009 Free Copy



'மீண்டும் வாழ்வோம்' நிகழ்ச்சியினை தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரை சூரியன் அலைகளில் கேட்கலாம்

வன்னிக்கான உணவு விநியோகமும் வவுனியாவில் கல்வி நடவடிக்கைகளும்

வன்னியிலிருந்து வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்திற்கு 62,212 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். வவுனியாவில் 15 முகாம்களிலும் யாழ்ப்பாணத்தில் ஆறு முகாம்களிலும் இடம்பெயர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் வன்னியிலிருந்து கடல் மார்க்கமாக மேலும் ஒரு தொகுதி நோயாளர்கள் அழைத்துவரப்பட்டுள்ளனர். இவ்வாறு அழைத்துவரப்படும் நோயாளர்களது எதிர்பார்ப்புகள் குறித்து அனர்த்த நிவாரண நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வைத்திய அதிகாரியான குணாளன் தெரிவிக்கையில், வன்னியிலிருந்து வருகின்ற நோயாளர்கள் அமைதியானதொரு சூழலை எதிர்பார்க்கின்றார்கள், ஏனெனில் அவர்கள் துப்பாக்கி சத்தங்களுக்கு மத்தியில் சிக்குண்டு அங்கிருந்து வருகின்றார்கள், இரண்டாவதாக அவர்களுக்கு ஆதரவாக இருந்து நாங்கள் உதவிகளை வழங்க வேண்டும் என்று எம்மிடம் எதிர்பார்க்கின்றார்கள், எல்லாவற்றிற்கும் மேலாக வன்னியில் விட்டுவந்த தமது உறவினர்களை எண்ணி அவர்கள் மிகுந்த கவலையுடன் இருக்கின்றார்கள் என்றார்.

வன்னியிலிருந்து வரும் நோயாளிகள் மற்றும் உதவியாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் தொடர்பில் வைத்திய கலாநிதி குணாளன் மேலும் தெரிவிக்கையில் நோயாளர்கள் திருகோணமலையில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் உலக தரிசனம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊடாக அவர்களுக்கு உடனடியாக உணவு வழங்குகின்றோம். அதே உணவைத்தான் நாங்களும் அங்கு செல்கின்றபோது உண்ணுகின்றோம். நல்ல உணவு வழங்கப்படுகிறது. கடந்த முறை நான் அங்கு சென்றிருந்தபோது நூடில்சும் முட்டையும் கொடுத்திருந்தார்கள். இந்த முறை புட்டும் கோழிக்கறியும் கொடுத்தார்கள். மிகவும் கஸ்டப்பட்டு வருகின்ற மக்களுக்கு உணவு மிகவும் முக்கியமானது. அவர்களுக்கு நல்ல உணவு கொடுக்கப்பட வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம் என்றார்.



வன்னியிலுள்ள புதுமாத்தளன் பகுதி மக்கள் நிவாரணப் பொருட்களை பெற்றுக் கொள்ள வரிசையில் நிற்பதை படத்தில் காணலாம்.

வன்னியிலுள்ள மக்களுக்கு கடந்த 2 ஆம் திகதியன்று 1030 மெட்ரிக் தொன் அளவிலான உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அடுத்த உணவுத் தொடரணி குறித்து உலக உணவுத்திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அடனாஸ்கான் கருத்துத் தெரிவிக்கையில் தற்போது அனுப்பப்பட்டிருக்கின்ற உணவுப்பொருட்கள் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு இருபது நாட்களுக்கு போதுமானதாக இருக்கும். அடுத்த கப்பல் எப்போது பயணிக்கும் என்பதை சரியாக எம்மால் கூறமுடியாதுள்ளது. ஆனால் சில வேளைகளில் இம்மாதத்தில் அடுத்த கப்பலை அனுப்ப முடியும் என நம்புகின்றோம் என்றார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் வடக்கு கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கான உணவு நிவாரணத்திற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் 19,490 மெட்ரிக் தொன் பொருட்களை உலக உணவு ஸ்தாபனத்திற்கு வழங்க தீர்மானித்துள்ளது

மேலும் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான உணவு நிவாரணத்திற்காக சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனம் 19,490 மெட்ரிக் தொன் பொருட்களை உலக உணவு ஸ்தாபனத்திற்கு வழங்க தீர்மானித்துள்ளது. தற்பொழுது வன்னிக்கு அனுப்பப்பட்டு வரும் நிவாரணப் பொருட்களில் 65 வீதமானவை இந்த அமெரிக்க முகவர் நிறு வனத்தினால் உலக உணவுத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட நிவாரணங்களாகும்.

இந்நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் மனிக்பாமிலுள்ள மூன்றாவது வலயமான அருணாசல நிவாரணக் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் ரஞ்சனி ஒல்வெல்ட் தெரிவித்தார். மேலும் UNICEF நிறுவனம் இங்கு தற்காலிகக் கொட்டகைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்தில் ஏழு பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக இயங்குவதால் மக்கள் குடியமர்த்தப்பட்டவுடன் பாடசாலைகளை கற்றல் செயற்பாடுகளுக்கேற்ப புனரமைக்க வேண்டிய தேவையுள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் பாடசாலைகளின் ஜன்னல்கள், பைப் லைன்கள் உடைந்திருக்கலாம், மின்சார வயர்கள் துண்டிக்கப்பட்டிருக்கலாம், அசுத்தப்பட்டிருக்கலாம், ஆகவே அவற்றை சுத்தப்படுத்தி திருத்த வேலைகளை மேற்கொண்டு அவற்றை பாடசாலை நடவடிக்கைகளுக்கு மீளக்கையளிக்க வேண்டும். அவற்றிற்கான மதிப்பீட்டை நாங்கள் தற்போது மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கியிருக்கின்றோம் என்றார்.

மீள்குடியேற்ற மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை

திருகோணமலை மூதூர் கிழக்கில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பெரும்பாலான மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுகிறது. அவர்களது வாழ்வாதாரம் கடலிலேயே தங்கியுள்ளது. கிழக்கின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள முகாம்களில் வாழ்ந்த மக்கள் கடந்த வருட இறுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்டு பல மாதங்க ளானபோதிலும் கடலுக்கு செல்வதற்கு இது வரையில் அனுமதி கிடைக்காத காரணத்தினால் இவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

திருகோணமலை மூதூர் கிழக்கில் உள்ள கட்டைபறிச்சான் கிராமத்தில் வாழும் மக்களும் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப் பட்டவர்களே. தொழிலின்மையினால் பொருளாதார சிக்கலுக்கு இவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இரண்டரை வருடங்களுக்கும் மேலாக முகாம்களில் வாழ்ந்த இவர்கள் அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய உலர் உணவுப் பொருட்களை நம்பியே வாழ்ந்தனர். அன்றாடம் தொழில்களைச் செய்தே பிள்ளைகளின் கல்வித்தேவை மற்றும் மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர். இந்நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னரும் பல மாதங்கள் தொழிலின்றி இருக்கின்றமை அவர்களது வாழ்வாதாரத்தை பெரிதும் பாதித்துள்ளது என்றார் அந்த கிராமத்தில் வசிக்கும் இராசரத்தினம் உருத்திரன்.



கட்டைபறிச்சான் மீள்குடியேற்ற கிராம மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்

சில மீள்குடியேற்றக் கிராமங்களில் மீனவர்களுக்கு கடலுக்கு செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.எனினும் நேரப்பிரச்சினை காரணமாக போதிய வருமானத்தை ஈட்ட முடியாமல் இருப்பதாக அப்பிரதேசத் தில் வாழும் மீனவர் ஒருவர் தெரிவித்தார். மேலும் சில கிராமங்களுக்கு இதுவரையில் அனுமதி வழங்கப்படவேயில்லை என்பது கவலைக்குரிய விடயம். 5 மணிக்கு பின்னர் கடலுக்கு செல்வதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப் படுகின்றமையினால் அதன் பின்னர் மீன் பிடிப்பதில் சிக்கல்கள் காணப்படுகிறன. குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே மீன் கிடைக்கின்ற காரணத்தினால் கடலுக்கு செல்வதற்காக செலவழிக்கும் பணத்தினைக் கூட சில சமயங்களில் பெற்றுக்கொள்ள முடியாமல் போகிறது என்று அங்கலாய்த்தார் உருத்திரன்.

மக்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் இந்த பாரிய பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண விவசாய கால்நடை உற்பத்தி கைத் தொழில் அபிவிருத்தி மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் துரையப்பா நவரத்தினராஜாவிடம் வினவியபோது இதுதொடர்பாக பாதுகாப்பு பிரிவிடம் தாம் கதைத்துள்ளதாகவும் வெகு விரைவில் இதற்கான தீர்வு பெற்றுக்கொடுக் கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, மூதூர் கிழக்கைச் சேர்ந்த மக்களின் பிரதான தொழில்களில் ஒன்றாக காணப்படும் சேனைப்பயிர்ச் செய்கை மற்றும் விவசாயம் செய்தல் போன்றவற்றை முன்னெடுக்கவும் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்கிறார் அப்பிரதேச விவசாயி ஒருவர். பாதுகாப்பு காரணங்களுக்காக தமது வயல் மற்றும் சேனைகள் உள்ள பகுதிகளுக்கு செல்வதற்கு காணப்படும் தடையே இதற்கு காரணமாக இருக்கிறது. இது தொடர்பாகவும் தாம் கூடிய கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கும் அமைச்சர் கிழக்கு மாகாண மக்களுக்கு பல்வேறு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கில் துரிதப்படுத்தப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை

இம்மாதம் 4ஆம் திகதி சர்வதேச கண்ணிவெடிகள் பற்றியதான விழிப்புணர்வு மற்றும் அகற்றுவதற்கான தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையினால் கடந்த 2006ஆம் ஆண்டு இத்தினம் பிரகடனப் படுத்தப்பட்டது. இலங்கையிலும் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எமது நாட்டைப் பொறுத்தமட்டில் சுமார் ஒரு மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக தேசிய கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான செயற்பாட்டு குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே இக் கண்ணிவெடிகள் அதிகமாக புதைக்கப்பட்டுள்ளன. இதனை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை யுனிசெப், யு.என்.டி.பி, கல்வி அமைச்சு, தேசிய கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான செயற்பாட்டுக்குழு ஏனைய சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்து வருவதுடன் இராணுவ பொறியியலாளர்களும் தமது பங்களிப்பை செலுத்தி வருகின்றனர்.

வவுனியா, மன்னார் மற்றும் யாழ் மாவட்டங்களில் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாகவும், இனிவரும் காலங்களில் இலங்கைக்கு கண்ணிவெடிகள் இறக்குமதி செய்வதையும், புதைக்கப்படுவதையும் முழுமையாக தடைசெய்ய வேண்டுமெனவும் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள இடங்கள் அடையாளப்படுத்தப்படுவதுடன் இதன் தாக்கம் பற்றிய விழிப்புணர்வுகளை முன்னெடுக்கவேண்டுமென தான் எதிர்பார்ப்பதாகவும் தேசிய கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான செயற்பாட்டுக்குழுவின் தலைவர் ஏ.டி.பி. அமரசிங்க தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனத்தின் பல்வேறு திட்டங்கள் அரசாங்கத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுவதாகவும்,

(3ஆம் பக்கம் பார்க்க)



சர்வோதய நிறுவனம் மட்டக்களப்பு புலிபாய்ந்தகல் கிராமத்தில் மிதிவெடி அபாயக் கல்வி வழங்குவதை படத்தில் காணலாம்

'மீண்டும் வாழ்வோம்' நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம் வானொலி ஊடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணி முதல் 9.45மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் சிறை எப்.எம் வானொலியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.00 மணி வரையும் புத்தளம் பிரதேசத்தில் அநுர் எப்.எம் ஊடாக ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.45 மணி முதல் 7.15 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.internews.lk என்ற இணையத் தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

'மீண்டும் வாழ்வோம்' நிகழ்ச்சியினை திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தேசிய சேவையில் நீங்கள் கேட்கலாம்.

மீண்டும் ஏ 9 பாதையூடாக தரைவழி வர்த்தகம்

புதுவருடத்தை முன்னிட்டு நாடெங்கிலும் வியாபாரம் சூடுபிடித்து வருகின்றது. எனினும் யாழ்குடா நாட்டு சந்தையில் வியாபாரத்தில் பாரியளவு மாற்றங்கள் இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் அரசு ஏ9 பாதை மூலமாக மூன்று தடவைகள் வர்த்தகப் பொருட்களை யாழ்.குடா நாட்டிற்கு எடுத்துச் சென்றுள்ளது. புதுவருடத்தை முன்னிட்டு இருபது லொறிகளில் யாழ்குடாவிற்கு அவசியமான உணவு மற்றும் இதர பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18ஆம் திகதி முதல் யாழ்குடாவிற்கு அத்தியாவசியமான பொருட்கள் கப்பல் மூலமாகவே அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையிலேயே அரசு தனியார் வர்த்தகர்களுக்கு ஏ9 பாதை வழியாக வர்த்தகப் பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு தரை வழியாகப் பொருட்கள் சந்தையை அடைவது யாழ். வர்த்தகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என யாழ் வணிக சங்கத்தின் தலைவர் இராசையா ஜனகுமார் தெரிவித்தார். மேலும் இது குறித்து அவர் தெரிவிக்கையில் ஒரு சீரான வியாபாரம் யாழ் சந்தையில் தற்பொழுது நடைபெற்று வருவதாக வும் இதுவரை கப்பல் மூலமாகவே பொருட்கள் வந்து சேர்ந்ததாகவும் எனினும் தற்போது வியாபாரிகள் ஏ9 பாதையூடாக வர்த்தகப் பொருட்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் தரைவழியாகப் பொருட்கள் வந்து சேர்வது போக்குவரத்துச் செலவீனத்தைக் குறைப்பதால் மலருகின்ற புத்தாண்டில் மலிவு விலையில் பொருட்களை வழங்க முடியும், இருப்பினும் தரைவழியாக வரும் பொருட்களின் அளவு குறைவாகக் காணப்படுவதால் வர்த்தகத்தில் பாரிய மாற்றம் ஏற்பட சாத்தியக் கூறுகள் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான வியாபாரத்தில் ஏ9 பாதையானது மிக முக்கிய பங்கினை வகித்து வந்தது. மீண்டும் தரைவழி வர்த்தகமானது ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் பாரிய மாற்றங்களைக் காண முடியும் எனினும் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு தற்போது இருபது லொறி களை மட்டுமே அனுப்பக்கூடிய நிலை காணப்படுவதாக அத்தியாவசிய சேவை கள் ஆணையாளர் பி.திவாரத்ன தெரிவித் தார். அவர் இதுகுறித்து விவரிக்கையில் வழமையாக வர்த்தகர்கள் பொருட்களைக் கொண்டு வந்து எம்மிடம் ஒப்படைப்பார் கள், நாம் இராணுவப் பாதுகாப்புடன் யாழ்குடாவிற்குப் பொருட்களை எடுத்துச் செல்வோம், இருப்பினும் வர்த்தகர்களே அப்பொருட்களை நேரடியாக கொண்டு சென்



யாழ்ப்பாண சந்தைப் பகுதி

றால் குறைந்த விலையில் பொருட்களை வழங்க முடியும் என்பதற்காவே அரசு இத் திர்மானத்தை மேற்கொண்டது என்றார்.

தற்போது தரைவழியாகவும் கப்பல் மூலமாகவும் பொருட்கள் யாழ்குடாவை அடைவதால் பொருட்களின் விலையில் தளம்பல் நிலை காணப்படுகிறது. எனவே தரைவழி வர்த்தகத்தை அதிகரித்து கடல்வழி வர்த்தகத்தைக் குறைக்க வேண்டுமென்பதே யாழ் வணிக சங்கத்தின் வேண்டுகோள். எனினும் தற்போதைய நிலையில் மாதத்திற்கு இருமுறை மாத்திரமே பொருட்களை தரை வழியாக அனுப்புவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தற்போது தரைவழியாகவும் கப்பல் மூல



கிழக்கில்... (2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடி அபாயக் கல்வித் திட்டத்திற்காக நான்கு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இத்திட்டத்தினூடாக சிறுவர்கள் அதிகமாக உள்வாங்கப்படுவதாகவும் திருகோணமலை கச்சேரியில் அமைந்துள்ள கண்ணிவெடி அபாயக் கல்விப் பிரிவின் இணைப்பாளர் தில்லையம் பலம் குமரேஸ்வரி தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் சமூக நம்பிக்கை நிதியமானது கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வுகளை அனைத்து மக்களுக்கும் வழங்கி வருகின்றது. மூதூர் பகுதியில் வெடிக்காத வெடி பொருட்களின் தாக்கம் காணப்பட்டாலும் கூட சமூக நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் மக்கள் பொது அறிவினைப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இப்பகுதியில் கடந்த வருடம் எந்த ஒரு நபரும் கண்ணிவெடியின் பாதிப்புக்குள்ளாகவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் சமூக நம்பிக்கை நிதியத்தின் கண்ணிவெடி அபாயக் கல்விப் பிரிவில் மேற் பார்வையாளராகக் கடமையாற்றும் பிலிசியா வைலட் குறிப்பிட்டார்.

இந்நிறுவனங்களால் வழங்கப்படும் கண்ணிவெடிகள் தொடர்பான பூரண அறிவைப் பொதுமக்கள் பெற்றுக் கொள்வதுடன் ஆபத்தான நேரங்களில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இதே வேளை கிழக்கு மாகாணத்தில் இம்மாதம் இறுதிக்குள் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்படுமென தேசிய கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான செயற்பாட்டுக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"அரசின் எதிர்காலத் திட்டம் குறித்து புலம்பெயர்ந்தவர்களுக்கு விளக்குவது முக்கியமானது"

- அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் தொடர்பில் அறிந்து கொள்ளும் நோக்கில் அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க அவர்களை நேர்கண்டுள்ளோம்.

இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான சூழ்நிலையினை யிட்டு இலங்கை அரசாங்கம் எவ் வளவு கரிசனை கொண்டுள்ளது?

இயங்குதல் என்று வரும்போது மனித உரிமைகள் அமைச்ச மட்டுப்படுத்தப்பட்ட பாத்திரத்தினையே கொண்டுள்ளது. ஏனெனில், இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கான அதிகாரம் வழங்கப்பட்ட அமைப்பாகிய தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு இருக்கின்றது. 17 வருடங்களுக்கு முன்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விசேட சட்டத்தின் மூலம் ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து ஆணைக்குழு இயங்கி வருகின்றது. ஆணைக்குழுவின் பணிகளை வசதிப்படுத்துவதே உண்மையில் எனது பணியாகும். மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினைக் கொண்ட ஒரு சுயாதீனமான அமைப்பு இருக்கையில், ஓர் அரசியல்வாதி என்ற ரீதியில் அப்பொறுப்புக்களை நானே எடுத்துக்கொள்ள வேண்டும் என நான் நினைக்கவில்லை. எனவே, சட்டமியற்றும் உறுப்பினர்களில் ஒருவன் என்ற ரீதியில் நான் செய்வது என்னவென்றால், சட்டமியற்றல் முறை மூலமாக அச்சட்டத்தினை மேலும் வலுப்படுத்துவதும், பாராளுமன்றத்தின் மூலமாக வளங்கள் ஒதுக்கப்படும்போது ஆணைக்குழுவின் சார்பாக பேசுவதுமேயாகும். இதன் மூலமாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையினை முன்னெடுத்துச் செல்வதற்கு அவர்கள் பெறவேண்டிய பணத்தினை அவர்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இலங்கையில் மனித உரிமை நிலைமையினை மேம்படுத்துவ தற்கு ஏனைய நாடுகளிடமிருந் தும் ஏனைய மனிதநேய அமைப் புக்களிடம் இருந்தும் எவ்வாறு உதவிகளைப்பெற நீங்கள் எதிர் பார்க்கின் றீர்கள்.

தொழில்நுட்ப உள்ளீடுகள் மூலம் அவர்கள் எமக்கு அவர்களது நிபுணத்துவத்தினை வழங்கமுடியும். உதாரணமாக, ஜெனிவாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழு அவ்வாறானதொரு அமைப்பாகும். இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தொழில்நுட்ப உதவி விவில் அவர்களது நிபுணத்துவத்தைப் பெற்றுக்கொள்ள நாம் அவர்களுடன் கலந்துரையாடல்களை ஆரம் பித்துள்ளோம். தொழில்நுட்ப உதவியானது ஆற்றல் உருவாக்க



அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க

வடிவிலும், ஆலோசனை வடிவிலும் இருக்கும். இவை அடிப்படையில் தேசிய மனித உரிமை ஆணைக்குழுவிற்கு வழங்கப்படும். அதேபோல் எமது அமைச்சிற்கும் வழங்கப்படும். எமது அமைச்சிற்கும் வழங்கப்படுவதனால் அரச அதிகாரிகள் வசதிப்படுத்தல் பாத்திரத்தினை ஆணைக்குழுவுடன் வகிக்கமுடியும். இருதரப்பு ரீதியில் பல்வேறு கருத்திட்டங்கள் இருந்து வருகின்றன. அவற்றிற்கு ஆதரவு வழங்குவதற்கு இருதரப்பு பங்காளர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், ஆலோசனை, தொழில்நுட்ப ஆதரவு மற்றும் ஆற்றல் உருவாக்கம் ஆகிய பரப்புக்களிலேயே நாம் அவர்களின் சேவைகளை நாடி நிற்கிறோம்.

நாட்டிலுள்ள மனித உரிமை நிலை தொடர்பாக சர்வதேச சமூகம் தற்போது அரசாங்கத்திற்கு அழுத்தத்தினைப் பிரயோகித்து வருகின்றது. இவ்வாறான அழுத்தத்திற்கு நீங்கள் எவ்வாறு எதிர் வினையாற்றுகின்றீர்கள்?

ஏதாவது தவறுகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுமிடத்து அவற்றினை நிவர்த்தி செய்ய நாம் தயாராக இருக்கும் அதேவேளை நான் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடலிலேயே நம்பிக்கை வைத்திருக்கின்றேன். நாம் ஆசியப் பிராந்தியத்துடன் மட்டும் பேசாமல் அல்லது எமக்கு ஆதரவு வழங்குபவர்களுடன் மட்டும் பேசாமல் அனைவருடனும் பேசவேண்டும். அத்துடன் எம்முடன் பல பிரச்சினைகள் பற்றிப்பேச விரும்பும் இலங்கை நண்பர்களுடனும் பேச வேண்டும். அந்த நண்பர்களிற்கு நாம் செவிமடுக்க வேண்டும். அவ்வாறு நாம் அவர்களுடன் பேசும் போது, அவர்கள் முன்னிலையில் உண்மைகளை எடுத்துரைக்க வேண்டும். அப்போதுதான் இலங்கையில் உண்மையில் என்ன நடக்கிறது மேலும் இங்கே என்ன நிலை நிலவுகிறது என்பதன் அடிப்படையில் அவர்களால் முடிவுகளை எடுக்க முடியும். கலந்துரையாடலுக்கு எந்த மாற்றீடும் இல்லை என்பதில் நான் உறுதியான நம்பிக்கை உடையவன். எமது நண்பர்கள் அனைவருடனும் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படல் வேண்டும். மேலும் இங்கே என்ன நடக்கின்றது என்பதிலே மிகமுக்கிய பங்குதாரர்களாக இருக்கும் புலம் பெயர் சமூகத்தினை நாம் எவ்வாறு எட்டலாம் என்பதையும் நான் பார்க்க விரும்புகிறேன். அவர்கள் தாமே ஏற்பாடுகளை மேற்கொண்டு பல தலைநகரங்களில் எல்.ரி.ரி.ஈ.யின் சார்பில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதை நாம் பார்க்கின்றோம். அவர்களைத் துண்டித்துவிடாது, அவர்களைச் சந்தித்து, அவர்களுடன் பேச முயற்சித்து, அரசாங்கத்தின் நோக்கம் என்ன, அரசாங்கம் என்ன செய்கின்றது மேலும் அரசாங்கம் எதிர்காலத்தில் என்ன செய்யப்போகின்றது என்பதை அவர்களுக்கு விளக்குவது முக்கியமானது என நான் நினைக்கின்றேன். இதன் மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும்.

'மீண்டும் வாழ்வோம்' (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS

USAID
FROM THE AMERICAN PEOPLE

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்பக் காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உங்கள் கதை

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். வடக்கு, கிழக்குப்பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதே எமது நோக்கம். அந்தவகையில் இவ்வாரம் 'நிலப்பூ' குறுநாடகம் ஒலிபரப்பானது. குறுநாடகத்தின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது.

நிலப்பூ



ஏப்பிரல் 4ஆம் திகதி சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்பட்ட நிலக் கண்ணி வெடி விழிப்பூட்டல் தினத்தை நினைவூட்டும் வகையில் மீண்டும் வாழ்வோம் நிகழ்சியில் நிலப்பூ என்ற குறு நாடகம் கடந்த வார நிகழ்சியில் ஒலிபரப்பாகியது.

யுத்தம் நடைபெறும் நாடுகளில் நிலக்கண்ணி வெடிகளின் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. நிலக்கண்ணி வெடிகளின் தாக்கத்தால் அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் நிலக்கண்ணி வெடிகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அங்கவீனமான வர்களின் எண்ணிக்கையே அதிகமாகக்காணப்படுகிறது. கண்ணிவெடியினால் பாதிக்கப்பட்ட எத்தனையோ சிறுவர்கள் அங்கவீனர்களாக தமது எதிர்காலம் பற்றிய கேள்விக் குறியோடு வாழ்கிறார்கள். மனிதர்களைப் போல் விலங்குகளும் பெருமளவில் நிலக்கண்ணி வெடியின் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

எமது நாடகத்தில், யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வாழும் ஒரு குடும்பத்தின் தலைவர் கண்ணிவெடியால் காலை இழந்து விட்டார். அன்றாட செலவுகளுக்கே பணம் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். இவர்களுக்கு புனிதா என்று ஒரே மகள். குடும்பத்தின் வறுமை நிலையால் அவள் பாடசாலைக்குச் செல்வதில்லை. பாடசாலை செல்லும் மற்ற மாணவர்களைப் பார்த்து ஏக்கத்துடன் புனிதாவின் ஒவ்வொரு நாட்களும் கழிகிறது. பின்பு அவளது மன உணர்வைப் புரிந்து கொண்டு அருகில் உள்ள பாடசாலை அதிபருடன் தமது குடும்ப நிலையைக் கூறி புனிதாவைப் பாடசாலைக்கு அனுப்புகிறார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இப்படி எத்தனையோ குடுப்பங்கள் வாழ்கிறார்கள்.

பாடசாலை செல்லும் புனிதாவிற்கு பெற்றோர் நிலக்கண்ணி வெடி பற்றி கூறுகிறார்கள். தற்போது தொண்டர் நிறுவனங்களால் யுத்தத்தில் இருந்து விடுபட்ட பகுதிகளில் நிலக்கண்ணி வெடி அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. நிலக்கண்ணி வெடிப் பாதிப்பில் இருந்து மக்களை மீட்பதற்காக மக்களுக்கு சில எச்சரிக்கை அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்கள்.

நிலக்கண்ணி வெடி அபாயம் உள்ள இடங்களில் சிவப்பு நிறத்தில் அபாயப் பலகை போடப்பட்டிருக்கும், பாதுகாப்பு அரண்களுக்கு அருகில் செல்வதை மக்கள் கூடிய அளவுக்கு குறைத்துக் கொள்ள வேண்டும், மக்களின் பாவனை இல்லாமல் காணப்படும் காணிகளுக்குள் தேவையில்லாமல் செல்லக் கூடாது, இவற்றை நாம் பின்பற்ற வேண்டும். எமது பாதுகாப்பிற்காக தமது உயிரை பணயம் வைத்து சேவை செய்பவர்களுக்கு எம்மால் இயன்றளவு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சர்வதேச நிலக்கண்ணிவெடி விழிப்பூட்டல் தினத்தின் நோக்கம் மக்கள் மத்தியில் கண்ணி வெடி பற்றிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என்பதே.